

# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!

## அன்பு ஊற்றப்பட, இருதயம் விசாலமடைய வேண்டும்!

உங்கள் இருதயம் எவ்வளவு விசாலம் கொண்டதோ அந்த அளவுதான் பரிசுத்தாவியினால் தேவ அன்பு ஊற்றப்பட முடியும்! ஒருமுறை, "ஒரே ஒரு சிநேகிதனுக்காக" மூன்று அப்பம் கேட்டு சென்றவனுக்காக கதவைத் திறந்தவன் "உனக்குத் தேவையானதை எடுத்துக்கொள்!" என பதிலுரைத்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்து போனான்(லூக்கா.11:6-8). அங்கு 3 அப்பங்களல்ல, 'ஏராளமாய்' அப்பமிருப்பதைக் கண்டு அவன் பிரமித்தாலும்...

என்ன செய்வது? அவன் இருதயத்தில் 'ஒரே ஒரு சிநேகிதன்தான்' உண்டு! அவன் இருதய விசாலத்திற்கு 3 அப்பங்கள்தான் கொள்ளும்! அந்த தேவையான 3 அப்பங்களை அவன் எடுத்துச் சென்றாலும், "தன் இருதயம் இப்படி சுருங்கி இருக்கிறதே!" என்ற மன வருத்தத்தையும் தன் இருதயத்தில் ஏந்திச் சென்றுவிட்டான்!! பொழிந்திடும் தெய்வ அன்பிற்கு நம் இருதயம் நாளுக்குநாள் விசாலமடைவதாக! 'அனேகரை' நம் நெஞ்சில் ஏற்று வாழ்வோமாக!

*-tr*

பெட்டகம் 20 | மே 2018 | பரல்கள் 5



## நாமாக பெற நாடும் உலக செல்வம், தேவனை பிரித்திடும்!

ஒரு சமயம், தேவனுக்கு மகிழ்வுடன் தன்னை அர்ப்பணித்து ஊழியம் செய்த ஒரு சகோதரன், தன் வாழ்வின் கடின சூழ்நிலை நீங்கினால், தான் கர்த்தரை இன்னும் வலிமையாய் சேவிக்கலாமே என எண்ணினார்! அவருடைய வேண்டுதலை தேவன் 'சூசகமாய்' கேட்டு, அதற்குப் பதிலை உடனே அனுப்பினார்!! ஆம், வாழ்வில் கடினம் விலகி சுமுகமான சூழல் அவருக்கு வெகு சீக்கிரமாய் ஏற்பட்டது! ஆனால், அந்த சுமுகமான தன் வாழ்வின் புதிய சூழ்நிலையில், அந்த தேவமனிதன் தான் இடைவிடா உறவுகொண்டிருந்த 'நேசரை' காண முடியாமல் தவித்தார்!

இப்போது ஓர் நல்ல பாடத்தை துரிதமாய் கற்றுக்கொண்டார்! "தேவனாகவே என் வாழ்வின் சூழலை மாற்றுவதற்குத் தீர்மானித்தால் அப்படிச்செய்யட்டும்! ஆனால் அவர் அப்படிச் செய்யாதிருக்கும் பட்சத்தில், நானாக **'எல்லையை விட்டு' வெளிவரவும் மாட்டேன் ..... அவருடைய இனிய சமூகத்தை இழந்து அல்லலுறவும் மாட்டேன்!!"** என்ற பாடத்தையே கற்றுக்கொண்டார். இப்போது இந்த தேவமனிதன் என்ன செய்தார் தெரியுமா? "ஓ, தேவனே! என் மதியீனமான எண்ணத்தை மன்னித்து, நான் தொடர்ந்து உம்மை தரிசிக்கும்படி, நீர் எனக்கென நியமித்த வாழ்வின் சூழலை மீண்டும் தாரும்!" என ஜெபித்து..... மீண்டும், தான் இழந்த நேசரின் ஐக்கியத்தைப் பெற்றுக்கொண்டார்!! ஆம், நேசர் இயேசு இல்லாத செல்வம் என்னத்திற்கு? ஏன், அவர் இல்லாத 'பரலோகமே' நமக்கு என்னத்திற்கு?

*-Ed*


**2018 'பரலோக பொக்கிஷங்கள்'**

வருட சந்தா ரூ.**140.00** **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**120.00**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch

A/c no: **502087685** Ifsc code: IDIB000K150

(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)


**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**

**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**


கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்

207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India

Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306

Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com

## “கிறிஸ்துவுக்குள்” வாழாதவன் கிறிஸ்தவன் அல்ல!

*கிறிஸ்துவின் ‘வெளிப்புறமான ஊழியத்தை’ யார் வேண்டுமானாலும் சுவிசேஷங்களில் வாசித்திட முடியும்! அவர் ஏழைக்கு இறங்கினார், குஷ்டரோகிகளைத் தொட்டார், வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கினார், சுவிசேஷத்தை பிரசங்கித்தார் போன்றவைகளேயாகும். எல்லா மதத்திலும் உள்ள ஜனங்களும்கூட, இயேசுவினுடைய வெளியரங்கமான இந்த ஊழியத்தைப் போற்றுகிறார்கள். இன்னும் சிலர், இயேசுவைப் போல் இந்த வெளிப்புற பகுதியில் தாங்களும் செயல்பட முயற்சித்திருக்கிறார்கள். இதுபோன்ற வெளிப்புற ஊழியம், ஒருவனுக்கு அதிக மதிப்பை கொண்டு வந்து தருகிறபடியால், மனுஷருடைய கண்களுக்கு புகழுடையதாயிருக்கிறது. ஆனால் எபேசிய நிருபமோ, ஒருவன் ‘கிறிஸ்துவுக்குள்’ இருப்பதையே வலியுறுத்துகிறது. பவுல் இங்கே பேசியதெல்லாம் ‘உள்ளான ஜீவியத்தையே’ பேசினார்.*

> **நீங்கள் கிறிஸ்துவுக்குள் இல்லாமல், இயேசுவின் வெளிப்புற ஜீவியத்தை பின்பற்றினால், நீங்கள் இரட்சிக்கப்படுவதற்குகூட சாத்தியமில்லை! இயேசுவின் வெளிப்புற ஜீவியத்தை பாவனை செய்து, மனுஷருடைய கனத்தை நீங்கள் தேடலாம். நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்து, அதன் மூலமாய் அவருடைய உள்ளான மதிப்புக்களையும், அவருடைய உள்ளான மனவிருப்பங்களையும் காண்பதிலிருந்துதான், உண்மையான ஆவிக்குரிய தன்மை பிறக்கிறது.**

*இயேசுவின் ஜீவன் முதலாவதாக நமக்குள் வரவேண்டும்! பின்பு, நமக்குள்ளிருந்து வெளிப்படவேண்டும்.*

*ஆசரிப்பு கூடாரத்தை உற்றுநோக்கும்போது, வெளிப் பிரகார சுவர்களிலிருந்து தேவன் தன்னை ஆரம்பிக்கவில்லை! அவரோ மகா பரிசுத்த ஸ்தலத்தின் மையமான* **உடன்படிக்கை பெட்டியிலிருந்தே** *தன்னை ஆரம்பித்தார்! இதுவே, தேவனுடைய வழியாய் எப்போதும் இருக்கிறது. நாம் தனிப்பட்ட விதத்திலும், ஒரு சபையாகவும்..... நாமே தேவன் தங்கும் வாசஸ்தலமாயிருக்கிறோம். ஆகவே, தேவன் தம்முடைய வாசஸ்தலத்தை உருவாக்கியவுடன், உங்கள் ஆவியாகிய* **‘உள்ளிருந்துதான்’**

*எப்போதும் அவர் துவங்குவார்! இந்த குறைவான நிருபத்தில் 'உள்ளாக' என்ற பதம் 89 தடவைகள் வருகிறது. 'கிருபை' என்ற பதம் 13 தடவைகளும் 'ஆவிக்குரிய' என்ற பதம் 13 தடவைகளும் வருகிறது. எபேசிய நிருபம்,* **பொளாதார ஐசுவரியத்தை பேசவில்லை! ஆனால், ஆவிக்குரிய ஐசுவரியத்தைப் பேசுகிறது!** *இந்த நிருபம் நியாயப் பிரமாணத்தை அல்ல, கிருபை ஒன்றையே பேசுகிறது! இந்த நிருபம் 'கிறிஸ்துவுக்குள்' நம் உள்ளான ஜீவியத்தில் துவங்கி தொடர்ந்து, நம் வெளிப்புற நடக்கை வரைக்கும் எடுத்துக்காட்டுகிறது. 'இதை மனதில் கொண்டவர்களாய்' எபேசியர் நிருபத்தை நீங்கள் கற்றுகொள்ளும் போது மாத்திரமே, இந்த பூமியிலேயே, ஒரு பரலோக வாழ்க்கையை வாழ்வது பற்றிய தெளிவையும் பெறுவீர்கள். ஆகவேதான், இந்த நிருபம் துவங்கும்போதே "உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும்" எனத்துவங்குகிறது (எபே.1:3).*

*எபேசியர் இரண்டு பிரிவுகளாய் நேர்த்தியாக வகையறுக்கப் பட்டுள்ளது. முதல் 3 அதிகாரங்கள், கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாகிய நம்முடைய நிலையை கூறுகிறது. அடுத்த 3 அதிகாரங்கள்.... நாம் இந்த பூமியில் எவ்வாறு நடக்க வேண்டும் எனவும், 'கிறிஸ்துவுக்குள்' என்ற நம் நிலையில், உறுதியுடன் நின்று பிசாசுடன் எவ்வாறு போரிட வேண்டும் எனவும் கூறுகிறது. இது எப்படியெனில், ஒரு கட்டிடத்தின் அஸ்திவாரத்தையும், அதின் மேல் கட்டப்படும் கட்டிடத்தையும் போல் இருக்கிறது. 'அஸ்திவாரம்' முதல் 3 அதிகாரங்களிலும், 'கட்டிடம்' கடைசி 3 அதிகாரங்களிலும் காணப்படுகிறது.*

> **நீங்கள் 'கிறிஸ்துவுக்குள்' என்ற அஸ்திவாரம் இல்லாமல், கட்டிடம் கட்ட துவங்கினால், இயேசுவின் ஜீவியத்தை புகழும் கிறிஸ்தவரல்லாத வர்களைப்போல் மாறி விடுவீர்கள்!**

*அவர்களைப் போல் நீங்களும் "இப்போது, நாமும், கிறிஸ்துவின் போதகமாகிய மலைப்பிரசங்கத்தை கடைபிடித்து நடக்கலாம்" என கூறி ஆரம்பிப்பீர்கள். அநேக மார்க்க ஜனங்கள் மலைப்பிரசங்கத்தை பின்பற்ற முயற்சித்து மற்றவர்களிடம் அன்புடனும் நல்லவர்களாயும் நடக்க முயற்சித்திருக்கிறார்கள். அஸ்திவாரம் இல்லாமலே, கட்டிடத்தைக் கட்ட முயற்சித்தார்கள். அவ்வாறு கைக்கொள்ள முன்வந்தவர்களைப் பகுத்தறிய முடியாத கிறிஸ்தவர்கள் "கிறிஸ்துவைப் போலவே" இவர்களும் இருக்கிறார்கள் என புகழவும் தொடங்கி விடுகிறார்கள். ஆனால் அவர்களோ குருடர்களா யிருக்கிறார்கள். அஸ்திவாரம் இல்லாத ஒரு வீடு, வெள்ளம் வந்தவுடன் அடித்துச் செல்லப்படும்!*

அஸ்திவாரம் இல்லாத இவர்களை நீங்கள் புகழ்வதால் ஏற்படும் அபாயம் என்னவென்றால், நீங்களும் அவர்களைப் போலவே முற்றுப்பெறுவீர்கள். உங்கள் ஜீவியத்தை, ஏழைகளை விசாரிக்கும் சமூகசேவைக்கும், குஷ்டரோகிகள், விதவைகள் காப்பகம் நடத்துவதற்கும்..... அதன் மூலமாய், மனுஷர்களுடைய கனத்தையும் பெறுவீர்கள்.

**ஆனால், நீங்கள் "கிறிஸ்துவுக்குள்" இல்லையென்றால், தேவனால் புறக்கணிக்கப்படுவீர்கள். இதுவே, கிறிஸ்தவத்தில் நாம் சந்திக்கும் உண்மையான அபாயமாகும்!**

எபேசியர் முதல் 3 அதிகாரங்களில் எந்த புத்திமதிகளோ அல்லது கட்டளைகளோ கூறப்படவில்லை. ஆம், இந்த 3 அதிகாரங்களிலும் நாம் செய்யும்படி எதுவும் சொல்லப்படவில்லை. நமக்கு அங்கு கூறப்பட்டதெல்லாம் 'தேவன் நமக்கு என்னச் செய்தார்' என்பது மாத்திரமே. ஆனால் 4 முதல் 6-ம் அதிகாரம் வரை முழுவதும் புத்திமதிகள் கூறப்பட்டுள்ளன. இந்த சமநிலையை நம் கிறிஸ்தவ ஜீவியத்திலும் வைத்திருக்க வேண்டும். நாம் முதலாவதாக உள்ளத்தில் பற்றிக்கொள்ளவேண்டியதெல்லாம் "தேவன் நமக்காகவும் நமக்குள்ளும் என்ன செய்திருக்கிறார்" என்ற சத்தியமேயாகும். பின்புதான், தேவன் நம் மூலமாய் கிரியை நடப்பிக்கும் பகுதிக்குள் செல்ல முடியும். தேவன் நமக்குள் முதலாவதாக ஒரு கிரியையை செய்யாத பட்சத்தில், நம் மூலமாய் கிரியை நடப்பிக்க அவரால் முடியாது.

அநேக மதங்களில் உள்ள ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை வியந்து, மலைப்பிரசங்கத்தை வாசிக்கிறார்கள் (மத்தேயு5-7). மேலும், அதைப் பின்பற்றவும் முயற்சிக்கிறார்கள். அதனிமித்தம், ஏராளமான நன்மையானவைகளையும் செய்கிறார்கள். ஆனால் இவர்களோ, முதலாவதாக "**கிறிஸ்துவுக்குள்**" இன்னமும் வரவில்லை. எனவே அவர்களின் எல்லா கிரியைகளிலும், தேவன் அவர்களைக் கொண்டு கிரியை நடப்பிக்கவில்லை. அவர்களோ கிறிஸ்துவின் சுபாவத்தை முயற்சி மாத்திரமே செய்தார்கள். அது எப்படியெனில் **'ஒரு நெருப்பு ஜுவாலையை' சித்திரம் வரைந்ததுபோல்** ஆகும். ஒரு சித்திரக்காரன், தூரத்திலிருந்து பார்த்தால் 'உண்மையான ஜுவாலையைப் போல' அக்கினி ஜுவாலையை சித்திரம் தீட்ட முடியும். ஆனால், அதுவோ எந்த வெளிச்சமும், வெப்பமும் தர இயலாது! பகுத்தறியும் பண்பு நமக்கு இல்லையென்றால், கிறிஸ்துவைப் போல நடக்க முயற்சிப்

*பவர்களால், நாம் எளிதில் வஞ்சிக்கப்பட முடியும். 'கிறிஸ்துவைப் போன்ற ஒரு போலியை' ஒரு மனிதன் பெற்றுவிட்டால், அவனுக்கு இந்த உலகத்தில் ஏராளமான புகழ் உண்டாகும்! ஆனால், அந்த புகழ் அவனுக்கு நித்திய ஜீவனைத் தராது.*

*– சகரியா பூணன்*

---

## 'முள்ளில் மலர்ந்த ரோஜாவாய்' என்னை மலரச் செய்தார்!

*__நா__னும் என் கணவரும், சுமார் பத்து மைல் தூர பிரயாணத்திற்கு சில பெருமான் பெருமாட்டிகளைக் கொண்ட கோச் சாரட் வண்டியில் சேர்ந்து பயணம் சென்றோம். இவ்வாறு பொது ஜனத்தோடு செல்லும் பயணத்தில் "என் சுயத்தை இழந்து தாழ்மையில் வாழும் ஜீவியத்தை" நடைமுறைப்படுத்த வேண்டிய தருணமாய் இருந்ததைக் கண்டேன். அன்றும் அவ்வாறே சூழ்நிலைகளின் மத்தியில் பிரவேசித்தபோது,* **திவ்விய கிருபையின் தாங்குதல்** *அதிக வல்லமையாய் இருந்தபடியால் சூழ்நிலையின் தாக்கம் என்னை பாதிக்காததைக் கண்டேன். நான் சென்ற சாரட் ரதம் திடீரென்று தடுமாறி, ஒரு ஆற்றில் கவிழ்ந்தது. ரதத்திலிருந்த பெருமான் பெருமாட்டிகள் 'உயிர் பிழைக்க வெளியே குதித்தார்கள்'. அந்தோ அவ்வாறு குதித்த அனைவரும் ஆற்றின் சொரி மணலில் மூழ்கினார்கள். நானோ 'உள்ளான அமைதியில்' பாதுகாக்கப்பட்டவளாய் அந்த அபாயத்தில் மாளவில்லை! தேவன் அனுமதித்திருந்தால், நான் ஆற்றில் மூழ்கி மரித்துவிட சம்மதித்திருப்பேன்! ஆனால், தேவனோ என்னையும் என் கணவரையும் 'புத்திகெட்டாத வகையில்' தப்புவித்தார்.*

**ஆற்றின் விபத்தில் நான் நடந்து கொண்ட செயல் 'புத்தியீனமானது' என சிலர் எண்ணக்கூடும். ஆனால், அது 'கிறிஸ்துவுக்குள்' புத்தியீன செயல்! நான் என்னையும் என் பெலனையும் சார்ந்து கொண்டு தப்பிக்க முயற்சிப்பதைவிட..... தேவனை சார்ந்துகொண்டு மரணத்தை தழுவுவதையே நான் தெரிந்து கொண்டேன். நான் என்ன சொல்லுவேன்? "அவரை நம்பி வாழ்வதற்காகவே" நாங்கள் உயிர் பிழைத்தோம்!**

*ஆகிலும், என்னுடைய செயலைப்போலவே மற்றவர்களும் செய்திட நான் ஒருபோதும் ஆலோசனை சொல்லமாட்டேன். அது ஏனென்றால், நான் தேவனோடு கொண்டிருந்த நெருக்கமான உறவை நீங்கள் பெறாமலே, என் செயலையோ அல்லது வேறு எந்த பக்தர்களுடைய செயலையோ பின்பற்றுவது தவறு என்றே கூறுவேன்!*

*என் கணவரின் நோய், நாளுக்கு நாள் அதிகமானது. இந்நிலையில்*

*St. ரெயினி ஸ்தலத்திற்கு மருத்துவம் பார்க்க என்னை அழைத்துச் சென்றார். அரண்மனையிலுள்ள எல்லோரையும் விட்டுவிட்டு, என்னை மாத்திரம் அழைத்துச் சென்றது ஒரு நல்ல மாற்றமாகவே இருந்தது. அதுமாத்திரமல்ல "மற்றவர்கள் உன்னை தீதுபேசுவதை இனி நான் செவிக்கொடுக்க மாட்டேன். அதுவே என் மனதிற்கும் உனக்கும் மகிழ்ச்சியாக இருக்கும் என நம்புகிறேன்" என்று கூறினார். அவருடைய மாறுதலில் எனக்கு மகிழ்ச்சித்தான். ஆகிலும் 'என்னுடைய மகிழ்ச்சி' பெரிதாய் காணமுடியாதபடி என் சுய - அன்பும், சுய - நலம் தேடுவதும், அவரோடு சென்ற பயணத்தில் ஏராளம் சம்பவித்தப்படியால், அதுவே எனக்கு துக்கமாய் இருந்தது.*

*ஒரு ஏழைப் பிரயாணி, இரவில் தன் வழியைத் தவறவிட்டு, வழி தெரியாது திகைத்தது போலவே அவருடன் சென்ற பயணத்தில் இருந்தேன்! St. ரெயினி ஸ்தலத்தைவிட்டு நாங்கள் வீட்டிற்கு திரும்பினோம். என் பிள்ளையை நான் இழந்தபடியால், என் முதல் மகன் மாத்திரமே எங்களோடு இருந்தான். அவனும் பலமுறை மரண தருவாய்க்குச் சென்று பிழைத்தான்! எங்கள் அரண்மனையின் ஏராளமான ஆஸ்திக்கு வாரிசு வேண்டுமே என்ற கவலை என் கணவருக்கு அதிகமாய் இருந்தது. இந்த நிலையில், தேவன் எங்களுக்கு இரண்டாவது மகனை தந்தார். அச்சமயத்தில் நான் அதிக பெலவீனமாய் இருந்தபடியால், என்னைப் பார்க்க மற்றவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அந்த படுக்கையில், நான் தேவனோடு உறவாடி,* **அமைதியான இளைப்பாறுதல் கண்ட** *அந்த நாட்கள் மிகப்பெரிய ஆசீர்வாதமாய் எனக்கு இருந்தது. நான் தேவனை நோக்கி "ஓ என் பிரிய கர்த்தாவே, இன்னும் சில நாட்கள் நான் உம்மோடு தனியாய் இருந்திட கிருபை கூர்ந்தருளும்!" என்றே ஜெபித்தேன். அந்த நாட்களில் என் உள்ளத்தில் பொங்கி வழிந்த தெய்வீக சந்தோஷத்திற்கு அளவே இல்லை! என் அந்தரங்க சுயத்தில், துன்பங்களும் பாடுகளும் மோதியடித்த துயரத்திற்கு ஈடாய், பரலோக புது வாழ்வின் நறுமணத்தை மனதார முகர்ந்தேன். தேவன் எனக்குள் பொதித்து வைத்திருந்த* **பரலோக பேரின்ப பாக்கியம்** *அனைத்தையும் எனக்கு காண்பித்து என்னை மகிழச்செய்தார்.*

*இச்சமயத்தில்தான், கிரங்கர் அம்மையார், அவருடைய ஊரில் சில நாட்களுக்கு முன்பே மரித்து விட்டதாக செய்தி கேட்டேன். நான் வாழ்ந்த நாட்களில் நான் பெற்றிருந்த ஒரே ஆறுதல் இந்த கிரங்கர் அம்மையார் மாத்திரமே! ஆகவே நான் அதிகமாய் உள்ளத்தில் வேதனை அடைந்தேன். அவர்களுடைய மரண தருவாயில், நான்*

*அவர்களோடு இருந்திருக்கலாமே என சஞ்சலம் கொண்டேன். வாழ்வின் கானக இருளில், ஒளிதரும் நல் ஆலோசனைகளை அவர்கள் ஏராளமாய் எனக்கு தந்து உதவினார்கள். அவர்கள் மரிப்பதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்பாக, எனக்கு ஏற்பட்ட சொல்லி மாளாத துன்பத்தில் அவர்களிடம் சென்று ஆலோசனைப் பெற என் உள்ளம் நாடியது. அவர்களை நான் காணாவிட்டாலும், அவர்களின் ஜீவன் எனக்கு ஆறுதலாய் இருந்ததை உணர்ந்தேன்.*

**நான் தனிமையில் சென்ற துன்பத்தின் பாதையில், அவர்கள் தேவனிடமிருந்து பெற்ற உயர்ந்த ஆலோசனைகளை எனக்கு கூறுவார்கள்! தேவனோடு உறவாடி வாழ்ந்த பரிசுத்தவான்களிடமிருந்து பெற்றிடும் ஆலோசனை எத்தனை மேன்மையானது என நான் அறிந்திருந்தேன்.**

*அவர்கள் எனக்கு கற்று தந்த "மனதை கொள்ளை கொள்ளும் வாசனை நிறைந்த இராஜ அரண்மனையிலிருக்கும் அழகு ரோஜா மலர்கள், முட்கள் இல்லாமல் மணமும் வசீகரமும் கொண்டதில்லை!" என்றே ஆலோசனைக் கூறி, தேவனோடு நான் இசைந்து நடக்க உதவிய பரிசுத்த அம்மையாரின் பிரிவு என் மனதிற்கு வேதனை தந்தது! ஆகிலும், ஏற்ற சமயங்களில் உயர்ந்த ஆவிக்குரிய ஆலோசனைகளை எனக்குத் தரும்படி 'கிரங்கர் அம்மையாரை' எனக்குத் தந்த தேவனுக்கு நன்றி கூறி அமைதிப் பெற்றேன்.*

*– மேடம் குயான்*

---

## தங்கள் 'பிராணனையும்' அருமையாய் எண்ணாத தாசர்கள்!

*__நா__ம் வாழும் இந்த கடைசி காலத்தில் "பொறுக்கி எடுத்தது போன்ற" ஆழமான ஆவிக்குரிய தைரியம் கொண்ட புருஷர்களே தேவனுக்கு தேவையாயிருக்கிறார்கள்! எங்கோ ஒரு மூலையில் 'எழுப்புதல் எங்கே?' என்ற கூக்குரலும்.... எங்கோ மற்றொரு மூலையில் 'உயிர்ப்பிக்கும் புதிதான ஆவியின் அபிஷேகமே' இன்றைய தேவை எனவும் கூக்குரல் ஒலிக்கிறது! தேவனோ, இந்த இரண்டுமே இன்றைய அழியும் காலத்திற்கு தேவை என்பதை அறிந்திருக்கிறார். தேவனுடைய வல்லமைக்கோ அல்லது அவரது எழுப்புதலுக்கோ பஞ்சம் ஏதும் தேவனிடம் இல்லை! ஆனால் இருட்டில் வாழும் எலிகளுக்கு அவர் ஒருபோதும் எழுப்புதல் தரமாட்டார்! யாதொன்றும் செய்ய இயலாமல், தத்தி செல்லும் முயல்களுக்கு தன்னுடைய அபிஷேகத்தின் வல்லமையை ஊற்றவும் மாட்டார்!*

இந்த வேத வசனத்தைப் பாருங்கள்: "அவைகளில் **ஒன்றையும்**

**குறித்து கவலைப்படேன்! என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்;** என் ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தை பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" என்றார் (அப்.20:24).

**பவுல் அப்போஸ்தலன் வைத்திருந்த இத்தனை மகத்துவமான ஆவிக்குரிய தைரியத்தை விட, குறைவான தரத்தை தேவன் நம்மிடம் ஒருபோதும் விரும்புவதில்லை.**

இவ்வாறு தங்களையே, ஆத்தும போர்களத்தில், தங்களை முற்றிலும் செலவழிக்க விரும்பும் உத்தம ஊழியர்களையே தேவனுடைய இருதயமும் வாஞ்சித்து நோக்குகிறது. இவர்களே தங்கள் பிராணனையும் அருமையாக எண்ணாது, அச்சமற்றவர்களாய் தீவிரித்து முன் செல்வார்கள்! ஏனெனில், இவர்கள் உலகத்தின் அனைத்து கவர்ச்சிகளுக்கும் ஏற்கனவே முற்றிலுமாக மரித்து வாழுகிறபடியால் 'உயிர் பயத்திற்கு' தூர விலகி நிற்கிறார்கள். இவர்கள் மாத்திரமே, தேவனுடைய கனத்திற்கு ஒப்பான தைரியத்தைப் பெற்று..... இன்றைய பெலஹீன மாந்தர்கள் அச்சமுடன் செயல்படும் எந்த கட்டாயத்திற்கும் அல்லது அவர்களது விசுவாசத்தை ஆளுகை செய்யும் எந்த வல்லமைக்கும், முற்றிலுமாய் விடுதலை பெற்றிருப்பார்கள்!

இவ்வாறு உலகத்திற்கும் தன் சொந்த பிராணனுக்கும் முற்றிலும் விடுதலை அடைந்த தகுதி மாத்திரமே, இன்று தேவனுக்கு மிகுந்த அவசியமாயிருக்கிறது! நமது பிரசங்க மேடைகளில் 'பொய்யான அதிகாரம் அல்ல' அனல் கொண்ட உண்மையான தீர்க்கதரிசிகளே நின்றிட வேண்டும்! இவ்வாறு விடுதலை பெற்ற புருஷர்கள் மாத்திரமே, தேவனுக்கும் அவரது ஜனத்திற்கும், பரத்தின் உயர்ந்த நோக்கத்தை முன்வைத்து தீவிர ஊழியம் செய்வார்கள்! இன்று பரிசுத்த ஸ்தலத்தின் உள்ளும் புறமும், ஜனங்கள் விரும்புகிற திசைக்கெல்லாம் தாறுமாறாக திரும்பி, ஜனங்களைப் பிரியப்படுத்த பின்தொடரும் இக்கால குளிர்ச்சிக்கு, இவ்வித வலிய தெய்வ புருஷர்களே தேவனுக்குத் தேவை! இவர்கள் மாத்திரமே யாதொன்று நடந்தாலும், பயத்துடன் முடிவு செய்யாதவர்கள்! பிறரைப் பிரியப்படுத்துவதற்காகவே, யாதொரு ஊழியத்தையும் செய்திட விருப்பமில்லாதவர்கள்! எவ்வித பொருளாதார ஒப்பந்தத்திற்கும் உட்பட்டு ஊழியம் செய்திட மறுப்பவர்கள்! 'வெறும் கடமைக்காக' யாதொரு மார்க்க செயலையும் செய்யாதவர்கள்! கடைசியாக, தங்களுக்கு

*கனத்தை தேடுவதற்கான விருப்பத்தையோ அல்லது தங்களுக்கு பெயர் பிரஸ்தாபம் ஏற்படுத்தும் எந்த ஒரு சம்பவத்திற்கும் தங்களை விற்றுப்போட மறுத்தவர்கள்!*

**இத்தனை தகுதி பெற்ற தீர்க்கதரிசிகள் கொண்ட சபையே உண்மையான சபை! அந்த தரமுள்ள சபை, தேவனுடைய போர்ப்படை முழக்கத்திற்கு 'ஜனங்களின் அபிப்பிராயம் என்ன?' என விசாரித்திட குனிந்து வளையாதவர்கள்.**

*ஆனால், அவர்களோ, தேவனிடமிருந்து கேட்டார்கள்! தங்கள் ஆண்டவரின் சித்தம் அறிந்தார்கள்! அதை அவர்கள் நிறைவேற்றினார்கள்! அவ்வளவுதான். இந்த உத்தம சபை தலைவர்களை, அங்குள்ள சபை ஜனங்கள் மனப்பூர்வமாய் பின்பற்றுவார்கள். அது, சில சமயம் ஜெயமாகவும்! அநேக சமயங்களில் ஜனங்களின் அவமானத்தை எதிர்கொள்வதற்கும்! இன்னும், பல்வேறு ஜனங்களிடமிருந்து வரும் துன்புறுத்தலுக்கும்! உட்பட்டதாயிருக்கும்!!*

*அவர்கள் பெறுகின்ற ஒரே 'திருப்தி' இந்த கேடான தவறுகள் நிறைந்த உலகில் தேவ கிருபையைக் கொண்டு "சரியாய் நிற்கிறோம்!" என்ற திருப்தி மாத்திரமேயாகும்.*

*– A.W.டோசர்*

---

## 'கிறிஸ்து இல்லாத' கிறிஸ்தவனால், சபையில் குழப்பம் வரும்!

*கிறிஸ்து இல்லாமல் நமக்கு இரட்சிப்பு இல்லை. அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன்! தேவனுடைய மகிமையின் பிரகாசம்! சூரியனை நாம் பார்க்க முடியாது..... அது பூமியைச் சுற்றியுள்ள ஆகாயத்தின் மூலமாய், தன் பிரகாசத்தை மட்டுப்படுத்தியே தன்னை நமக்கு வெளிப்படுத்துகிறது.*

*நாம் தேவனை அவர் இருக்கிறபடி காணவோ அறியவோ முடியாது! மாம்சத்தில் வந்த கிறிஸ்து மூலமாய், ஆவிக்குரிய நமது நிலைமைக்குத்தக்கதாக, தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார்! "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்றார். உண்மைதான், நமக்கு வேண்டிய சகல ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள்ளிருக்கின்றன. தேவனைத் தேடி, நாம் வானத்துக்கு ஏறவேண்டியதில்லை! எல்லையில்லா ஆகாயத்தைச் சுற்றி அலையவேண்டியதும் இல்லை! "நானும் பிதாவும் ஒன்று" என்றார்.*

**கிறிஸ்துவைச் சொந்தமாக்கி, அவராலே பிழைக்கிறவன் அவருக்குள்ளான ஆசீர்வாதங்களைப் பெற்று அனுபவிக்கிறான். 'இது வீண் பேச்சல்ல'**

**என்பதை அறியுங்கள். ஆம், கிறிஸ்தற்ற மனுஷன் சகலத்தையும் இழந்துப்போகிறான்!**

*ஆகையினால்தான் கிறிஸ்து, தம்மையே நமக்குக் காண்பிக்கிறார்! தம்மை முக்கியப்படுத்துவதால், அவர் பிதாவைக் கனவீனம் பண்ணுவதாக நாம் எண்ணிவிடக்கூடாது! நாம் பிதாவை நோக்கினால், அவரோ கிறிஸ்துவை நமக்குக் காண்பித்து:"இவர் என் நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்" என்றே இன்றும் கூறுவார்! நாம் ஆவியானவரை நோக்கினாலும், அவரும் கிறிஸ்துவையே நமக்குக் காண்பித்து, அவரையே நமக்குள் மகிமைப்படுத்தி கிரியை செய்கிறார். ஆகையால்தான், கிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் நடுநாயகனாக, எல்லோரையும் தம்மிடம் அழைக்கிறார்!* **மனுமக்களுக்கு கிறிஸ்து சகலத்திலும் சகலமுமாயிருக்க வேண்டுமென்பது தேவ தீர்மானமாய் இருக்கிறது!** *"என்னிடத்தில் வாருங்கள்", "என்னிடத்தில் விசுவாசமாயிருங்கள்", "என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்", "என்னைப் பின்பற்றுங்கள்", என்னிடத்தில் அன்பாயிருங்கள்", "என்னில் நிலைத்திருங்கள்", "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது" என்கிறார். நமக்கு எல்லாம் அவரே! இப்படியிருக்க, கிறிஸ்தற்ற வேத அறிவினால் பிரயோஜனம் என்ன? கிறிஸ்தற்ற ஆராதனைகளால் பிரயோஜனம் என்ன? கிறிஸ்தற்ற பிரசங்கக் மேடைகளால் பிரயோஜனம் என்ன? கிறிஸ்தற்ற கர்த்தருடைய மேஜையால் பிரயோஜனம் என்ன? "மதிகேடரே குருடரே எது பிரதானம்?" என்றே ஆண்டவர் சபைகளைக் கேட்கிறார். தேவனுடைய சகல பரிபூரணத்தையும் தமக்குள் உடையவராகிய கிறிஸ்து ரட்சகரை நாம் சொந்தமாக்கிக் கொள்ளாமல், அசட்டையாயிருந்து விட்டு கிறிஸ்து மார்க்கத்தின் பேராலே நாம் எத்தனை காரியங்களைச் செய்தாலும் பிரயோஜனம் இல்லை! கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவர்கள் உங்கள் சபைகளில் தாபரிக்க அனுமதித்தால், சகல குழப்பங்களும் கேடுகளும் வந்து சேரும் என்பதை அறிந்து, விழிப்புடன் சபையை பாதுகாத்து நடத்துங்கள்!*

*– பரமானந்தம் ஐயர்*

---

## கிறிஸ்துவுக்கு ஓங்கு புகழ்சேர்த்த, சாது கொச்சுக் குஞ்சு!

*ஜீவியத்திலும் ஊழியத்திலும் "கிறிஸ்துவுக்குள் வெற்றி சிறந்த" சாது கொச்சுகுஞ்சு பிரசங்கியார், தன் ஜீவியத்தில் அவர் கடந்துச் சென்ற சிலுவை பாதையை கீழ்க்கண்டவாறு அவரே ஒரு சமயத்தில் கூறினார்:"ஊழிய நாட்களில் என்னைச்சூழ அத்தனையான*

*துயரங்களும், கண்ணீர்களும் அலைமோதிக் கொண்டிருந்தன. எனது குழந்தை ஒன்று ஏற்கனவே மரித்திருந்தது. அடுத்த குழந்தை மரணத்தின் விளிம்பில் இருந்தது! அந்த குழந்தை, அவனது தாயாருடன் அவனது பாட்டி வீட்டின் பராமரிப்பில் இருந்தான். பாட்டி வீட்டில் (எனது மாமியார்) என்னைக் குறித்து வீண் பழிகள் சுமத்தினார்கள். "எனது சொந்த தவறுகளும், தப்பிதங்களும்தான் வீட்டில் நிகழ்ந்த அகால மரணம் மற்றும் எல்லா துன்ப துயரங்களுக்கும், கிலேசங்களுக்கும் அடிப்படை காரணம்" என்று எனது மனைவியின் பெற்றோர் இடைவிடாது பேசிக்கொண்டே இருப்பார்கள்..... என கூறினார். இவ்வாறாகவே, தன் வாழ்வின் பகுதிகளை மிகுந்த சவாலுடன் எதிர்கொண்டார்!!*

*உச்சகட்டமான துயரமாய், அவருடைய மனைவியே அவரை விட்டு விட்டு குழந்தைகளுடன் போய்விட்டாள். அந்த இருளான ஒளியற்ற வேளையில், ஜெபமும் வேதவசன தியானமும் மாத்திரமே அவரை காத்து நடத்திற்று.*

**தேவனுடைய தோளைப் பற்றிக்கொண்டு நடந்த அந்த வேளையில், அவருடைய இரண்டாவது குமாரன் சாமுவேல் குட்டியின் மரணச் செய்தி அவருக்கு தாங்கொண்ணா துயர இடியாக அவர் மேல் விழுந்தது. அந்த வேளையில், "என் கர்த்தாவின் கரங்களிலிருந்து அன்பொழுகப் பெற்றுக்கொண்டேன்!" என்ற இனிய பாடலைப் பாடினார்.**

*தேவனுடைய மகிமையின் சுவிசேஷத்தை வெகு தீவிரமாக பிரசங்கிக்க வேண்டுமென்ற வைராக்கியம் சாதுகொச்சுகுஞ்சுவுக்கு இருந்தது. கேராளாவின் அனைத்து எல்லைகளிலும், தென் இந்தியாவின் அநேக பாகங்களிலும் தேவனுடைய செய்தியை கொச்சுகுஞ்சு அறிவித்தார். அவருடைய பிரசங்கங்கள், கேட்போரை உயிர்மீட்சிக்கு வழிநடத்தி, மக்களை மறுபடியும் பிறந்த அனுபவத்திற்குள் கொண்டு வந்தது!*

*அவருடைய கூட்டங்களில் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் மக்கள் குதித்து கூச்சலிடவில்லை! மாறாக, அங்கு மனந்திரும்புதலின் கண்ணீர், மக்களின் கண்களிலிருந்து வழிந்தோடியது. மந்திரவாதிகள், பில்லி சூனியம் வைப்பவர்கள் எல்லோரும் தங்கள் மந்திரவாத புத்தகங்களைக் கொண்டுவந்து கூட்ட மேடைக்கு முன்பாகப் போட்டு எரித்தனர். திருடர்களும் கொள்ளைக்காரர்களும் தாங்கள் திருடிய பொருட்களை அந்தந்த உரிமையாளருக்கு திருப்பிக் கொடுத்து மன்னிப்பு கேட்டனர்!*

*1945-ம் ஆண்டு மார்ச் 15-ம் தேதி, படுக்கையிலிருந்த சாது அமைதியாக "இது தான் மரணமா......" என்று கூறியவாறே நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்.* **சிலுவையின் பாதையில்,** *தனக்கு தரப்பட்ட உத்தம ஊழியத்தை நிறைவேற்றிய சாது கொச்சுகுஞ்சுவைப்போல் இன்றும் நம் தேசத்தில் "அநேகரை" தேவன் எழுப்புவராக!!*

– *Selected*

---

## 'முற்றிலும் அர்ப்பணமே' எஜமானின் விருப்பம்!

*இந்தியா பாப்திஸ்து மிஷனை ஆரம்பித்திட வித்திட்ட மிஷனெரியான வில்லியம் கேரியிடம் ஒரு கேள்வியை, ஆண்டவர் முன் வைத்தார்! வெறும் "செருப்பு செப்பனிடுபவராய் இருந்த" கேரி "தன் கையிலிருந்த காலணியை" காண்பித்து, இது மாத்திரமே என்னிடம் உள்ளது! என உரைத்தார். "அதை எனக்கு கொடுத்துவிடு!" என ஆண்டவர் கட்டளையிட "உடனே" அதைக் கொடுத்துவிட்டார்!*

*உங்கள் கையில் எது உள்ளது? அது எதுவாயிருந்தாலென்ன, செருப்போ! வியாபாரமோ! குடிசைத்தொழிலோ! விவசாயமோ! அல்லது மின்னணு சிலேடையோ (*Micro Chips*)..... எதுவானாலும், அவருக்கு அதை உங்களால் கொடுத்திட முடியுமா? ஆம், தன்னை முற்றிலும் கொடுத்த எவரையும், தன் தாழ்மையுள்ள ஊழியனாய் தேவன் தன் கரத்தில் எடுத்துப் பயன்படுத்துவார்!! என்பதில் சந்தேகம் ஏதும் இல்லை!*

"தந்தேன் என் முழு நெஞ்சம் சொந்தமாக உமக்கே;
தந்தேன் என் ஏகஜீவன் உந்தன் சேவைக்கே;
உமக்கென்றே வாழுவேன், உம்தயை புகழுவேன்
உம்முன் பணிகிறேன் ஆட்கொண்ட இரட்சகா;
ஒவ்வோர் மூச்சும் நாடியும் உம் சேவைக்கே;
இவ்வொரே வாழ்வை அங்கீகரியும் தயவாக!
யாதும் பின் வைத்திடேன், உம் சித்தம் பணிவேன்,
நீர் மீட்ட ஜீவன், இதோ என்றும் உமக்கே!
ஈனன் எனக்காக யாவும் துறந்தீர்;
பாவ வழி சென்று மாந்தர் சாகிறார்;
ஜீவ வழி தப்பி மோசம் போகிறார்;
ஆத்மாதாயம் செய்ய உந்தன் ஆவியால்,

என்னை ஆட்கொண்டேவும் வல்ல இரட்சகா!!"

P.கிறிஸ்தீனாள் அம்மையார் எழுதிய இந்த கவிதை நமக்கும் சொந்தமாகுக!

*– Selected*

---

## தீமையிலிருந்து என்னைக் காத்த 'கர்த்தருக்கே' ஸ்தோத்திரம்!

**கி**றிஸ்தியான் தொடர்ந்து முன் சென்றபோது, அவன் கண்களால் காண முடியாத இரண்டு பிசாசுகள், அவனுடைய காதுகளில் பலவிதமான தீமையான மொழிகளைக் கூறின! அவனை சஞ்சலப்படுத்தும்படியான அவிசுவாச வார்த்தைகள்! அவனை தீட்டுப்படுத்தும்படியான பிறர் மீது கொண்ட கசப்புகள்! அவனை சோர்வடையச் செய்யும்படியான அதைரிய வார்த்தைகள்! நாமும் கூட, சில சமயங்களில் இதுபோன்ற வார்த்தைகளை நம் காதுகளில் கேட்க முடியும்..... அவை யாதொன்றும் பரிசுத்தாவியின் மூலமாய் வருவதல்ல! பிசாசு தரும் நூதனமான "பிறர்மீது சந்தேகப்படும் எண்ணங்கள்" மற்றும் பிறருடைய செயலுக்கு 'இதுதான் காரணம்' எனக்கூறி நம் உள்ளத்தில் பகை கொண்டு வர செய்யும் அவனுடைய முயற்சிகள்.... ஆகிய கெட்ட நோக்கங்களையும், கெட்ட காரணங்களையும் நம் உள்ளத்தில் போடுவான். இது அனைத்தும், பரிசுத்தாவியானவர் வழங்கும் நல்ல நோக்கத்திற்கும், நல்ல காரணத்திற்கும் நேர்மாறான சிந்தைகளாகும்! இதுபோன்ற சம்பவம் உங்களுக்கு ஏற்படும்போது, 'இங்கே தரப்பட்டுள்ள' பிசாசு காதில் முனுமுனுப்பது போன்ற காட்சியை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

**இதுபோன்ற பிசாசின் முனுமுனுப்புகளை கவனித்து கேட்டவர்களின் 'கணவன் மனைவி வாழ்க்கையில்' ஏராளமான பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன. 'ஒருவரைப்பற்றி' ஒரு காதில் பேசும் பிசாசின் சத்தம், மறுகாதில் இன்னொருவரைப் பற்றி பேசும் பிசாசின் சத்தம்.... இவைகளையெல்லாம் கேட்டு, கேட்டு கணவனும் மனைவியும் அன்பிலும் ஐக்கியத்திலும் வீழ்ச்சி அடைகிறார்கள்!**

எப்போதெல்லாம் தெய்வ அன்பிற்கு சேதம் ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் இந்த காட்சியை உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் கிறிஸ்தியானோ, இதே சமயத்தில், **பரிசுத்தாவியின் குரலை** தன் இருதயத்தில் கேட்டுவிட்டான். இந்த கிறிஸ்தியான் பரிசுத்தாவியின் குரலுக்கு மாத்திரமே செவிகொடுத்து ஆச்சரியமான விடுதலையைப் பெற்றான். அவன் உடனே தன் பாவங்களை தேவனிடம் அறிக்கைச்செய்து, தேவனுடைய

*வார்த்தையை விசுவாசத்துடன் கூறி சாத்தானை ஜெயித்து முன்னேறினான்!*

*அச்சமயத்தில், திடீரென்று இருள் விலகி வெளிச்சம் உதித்தது. அச்சமயம், தான் கடந்து வந்த பாதையை கிறிஸ்தியான் திரும்பி பார்த்தான். "ஆ, இவ்வளவு இடுக்கமான வழியாகத்தான் நான் நடந்து வந்தேனா? ஆகிலும், நான் எப்படி கீழே விழவில்லை? இது, நிச்சயமாய் ஆண்டவரின் செயல்! அவரே என்னை கால் வழுவாமல் என்னை காத்துக்கொண்டார்" எனக் கூறி வியந்தான். இதுபோன்ற சமயங்களில், நீங்கள் வீழ்ச்சியடையாது வாழ்ந்த வாழ்க்கைக்காக ஒருக்காலும் மேன்மைபாராட்டாதிருங்கள். அதாவது "நானே இந்த வழியில் நடந்து ஜெயம் பெற்றேன்! எனக்கூறாமல்,* **கர்த்தரே எனக்கு ஜெயம் தந்தார்**" *என அறிக்கைச் செய்யுங்கள். இவ்வாறாகவே நாமும் கூட, கர்த்தர் நம்மை 'இடது வலதுபுறம் சாயாமல்' நடத்தி வந்த பாதைகளை நாம் திரும்பிப் பார்த்து தியானிப்பது நல்லது. அது, சில சமயம் சரீர மரணத்திற்கு ஏதுவான சம்பவமாயிருக்கலாம் அல்லது ஒரு சாலையின் விபத்தாய் இருக்கலாம், அல்லது கள்ள உபதேசங்களால் தவறிச் சென்ற வழிகளாய் இருக்கலாம்..... ஆகிய இவை அனைத்தும், நமக்கு தீங்கு செய்ய வந்த அபாயங்கள்! நீங்கள் திரும்பிப் பார்த்து, தேவன் உங்களை அபாயங்களிலிருந்து விடுவித்த செயல்களுக்காக "ஓ கர்த்தாவே, எத்தனையோ அபாயங்களிலிருந்து எங்களை காத்தீரே!" என்ற நன்றியின் ஜெபம் உங்கள் உள்ளத்தில் எழும்புவதாக! அல்லேலூயா.*

*– மோட்ச பயணம் (சகரியா பூணன் விளக்க உரை)*

---

## "கல்வாரி அன்பின் ஆழமே" பெரிது!

*சில சமயங்களில் ஏதோ 'ஒரு நல்ல நிகழ்ச்சி' நமக்குச் சம்பவிக்கிறது. அச்சம்பவத்தால் நம்முடைய ஜீவியத்தில் தெய்வ அன்பின் ஊற்று திறப்பதை நாம் காண முடிகிறது! அந்த அன்பின் பிரவாகம் நித்தியமானதை அல்லது அன்பிற்குரிய காரியங்களில் சிலவற்றை ஒரு நிமிஷம் நாம் காணும்படிச் செய்கிறது. ஆகிலும் அந்த அன்பை, அது எப்படி இருக்குமென்று ஏதோ ஒரு திருஷ்டாந்தம் எடுத்துக்காட்டி 'வார்த்தைகளைக் கொண்டு' இன்னொருவனுக்கு எடுத்துக்காட்ட முடிவதில்லை! அந்த அன்பின் பிரவாகம் நம்மிடம் வரும்போது.... மாலை அந்திப்பொழுதின் சமயத்தில், 'மெல்லிய காற்று' ஒன்று மரங்களின் இலைகளை அசைப்பது போல் அவ்வளவு மெதுவாகவும், நமக்குப் பழக்கமான கை ஒன்று நம்மைத் தொட்டு,*

*நேரில் உணர்த்துவதுபோலவும் இருக்கும்! பெரும்பாலும், நான் ஏதோ பணியில் ஈடுபாடு கொண்டிருக்கும்போது இதை உணர்ந்திருக்கிறேன். உடனே* **'அது நம்முடைய கர்த்தர்'** *என்று நான் அறிந்து கொள்வதுண்டு! நாம் கர்த்தரைக் கண்டதும், நாம் வசிக்கும் இடத்திலுள்ள பொருட்கள் அனைத்தும் நம் கண்களுக்கு மங்கலாகி அவரது முகத்தரிசனம் ஒன்றே நம்மை ஆழ்த்திவிடும்! அப்பொழுது நமது ஆன்மா இன்ப பிரவாகத்தில் மூழ்கி,*

*"உம் தாசரல்லால் பேரன்பை*
*யார் ருசி பார்த்தவர்?"*

*என்ற பண்டைய கவி ஒன்றை என் நாவு மகிழ்வுடன் முனுமுனுக்கும்!*

**தெ***ய்வ அன்பிற்கு 'மறுபுறம்' உண்டு: அது, தம் அன்பின் சீஷர்கள் மூலமாய் நமக்கு தேவன் காட்டும் அன்பு! அந்த அன்பு, நம் உள்ளத்தை கோடைகாலத்தில் நம் தேகம் குளிர்ந்த நீரில் நீராடிக் களைப்பாறுவதுபோல் இருக்கும்! தேவனுடைய பிள்ளைகள் நமக்குப் பாராட்டும் அன்பை நினைத்து ஆச்சரியப்படும்போது, நமது கண்கள் திறக்கப்படுகின்றன..... அங்கும்,*

**நாம் 'கர்த்தரையே' அவர்கள் அன்பில் காண்கிறோம். நம் உள்ளம் தொட்ட அவர்களின் அன்பும் ஆண்டவருடைய தூய அன்பே! அது தெய்வ பிள்ளைகளோடு நாம் ஐக்கியமாய் இருக்கும்போது, தேவன் நம்மீது பொழியும் அன்பாய் இருக்கிறது!**

*ஆ தெய்வீக அன்பின் அவதாரமே*
*உம்மில் அன்புகூருகிறவர்கள் மூலமாய்*
*நின் அன்பை வெளிப்படுத்துகிறதினால்*
*நினை யாம் வணங்குகிறோம்*

*என்ற கீதமே, என்னிலிருந்து பாய்ந்துச் சென்றது!*

**து***ன்பத்தின் நெருக்கங்களில் காணும் அவரது அன்பின் உறவும் உண்டு: நம்மை மூடியிருக்கும் மந்தார சூழ்நிலை, கொஞ்சம் வெளிவாங்கும்! ஆ, அச்சமயம் கர்த்தர் நம்மோடு இருப்பதைக் காண்போம்! மந்தாரம் மூடிக்கொண்டிருக்கிற நிகழ்வுகள் 'இவ்வாறாகவே' நமக்கு அனுகூலமாய் மாறுகிறது! நம்முடைய கர்த்தர் மகா இரக்கமுள்ளவரா யிருப்பதால், நாம் சிலவேளை யாதொரு மந்தாரமில்லாதிருக்கவும், அந்த இரக்கத்தில், தேவனுடைய அன்பைக் கண்டுகொள்ளவும் அனுக்கிரகம் செய்கிறார்! ஆகிலும், இலகுவான அந்த சூழ்நிலையில் நான் அந்த அன்பைப் பார்த்தது சொற்பமாகவே இருந்தது!*

**ஆகவே, 'துன்பத்தின் பாதையில்' கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ளவே நீங்கள் வல்லவர்களாகுங்கள்!**

*தெய்வ அன்பின் வளர்ச்சி அனுபவங்கள், நமது மனோவாக்குக்கு எட்டாதவைகள்! பாடுகளின் வழியில், நாம் இந்த அன்பை அறிந்தது எவ்வளவு? அன்பின் ஆழம் நீளம் உயரத்தைப் பற்றி நமக்கு எவ்வளவு தெரியும்? அவருடைய மகிமை தங்கிய அன்பின் மகத்துவத்திற்கு முன்பாக, அசுத்தரும் வெறுக்கப்படத்தக்கவர்களுமாகிய நாம் 'பிளவுண்ட மலைக்குள்' புகுந்து ஒதுங்கி* **நொறுங்குண்டு,** *தூசியிலே மறைந்து கிடப்போமாக. இப்படி நம்மை தூசியிலும் சாம்பலிலும் கிடக்கச்செய்து, தேவனுடைய அன்பிற்குள் நடத்துவது சிலுவை மாத்திரமே! இயேசு முன் சென்ற சிலுவை பாதையின் பாடுகளில் தங்களை ஒன்றர கலந்தவர்கள் உள்ளத்தில் ஒரு கேள்வி பட்டயம்போல் உருவிப்பாய்கிறது! அதாவது "கல்வாரி அன்பை" நான் அறிந்திருக்கிறது எவ்வளவு என்பதே! அதுவே, நாம் வாழும் இன்றைய உலக ஜீவியத்திற்கும் ஊழியத்திற்கும் ஓங்கிய பெலனும், சவாலாயும் இருக்கிறது!!*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## 'அவரது பாடுகளுக்குள் மூழ்கும்' அபிஷேகம்!

*சில நாட்களுக்கு முன்போ அல்லது சில மாதங்களுக்கு முன்போ பெற்ற 'தண்ணீர் ஞானஸ்நானத்தை' தேதியிட்டு எழுதியிருந்ததைப் போலவே, அனேகர் 'பரிசுத்தாவியின் அபிஷேகம்' பெற்ற அந்த நாளையும் எழுதி வைத்துக்கொள்கிறார்கள்! கர்த்தருடைய செயலை இவ்வாறு எழுதிக்கொள்வது நிச்சயமாய் தவறில்லை! ஆனால், ஒரு பரிசுத்தவான் கூறியதுபோல் "இவர்கள்* Record *கிறிஸ்தவர்கள்!* Real *கிறிஸ்தவர்கள் அல்ல!" என்ற அவலநிலை ஏற்படுவதுதான் தவறு!! இவர்கள் இரட்சிப்பை "***நாள்தோறும்** *பாவங்கள் நீக்கி இரட்சிக்கப் படுவதாய்" இல்லாமல் 'பாவ மன்னிப்பு' என்ற நிலையில் நின்று விடுகிறார்கள்! (மத்தேயு.1:21). அதுபோலவே, பரிசுத்தாவியின் வல்லமையில்* **நாளுக்குநாள்** *'ஆவியில் நிறைந்து வாழாமல்' அந்நியபாஷை பேசுவதிலேயே நின்றுவிடுகிறார்கள்! (2கொரி.4:16).*

*கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் இன்னமும் புதிய ஏற்பாடு எழுதப்படாத காலம்! கந்தாகேயின் எத்தியோப்பிய மந்திரி தேவபிரியனாய் 'பழைய ஏற்பாடு' வேதாகமத்தை ஆர்வமுடன் தியானித்துக் கொண்டிருந்தார்! (அப்.8:27,32,33). ஏசாயா 53 - ம்*

அதிகாரத்தின் தியானத்தில், இயேசுவின் பாடுகளைக் குறித்த "கர்த்தரோ அவரை நொறுக்குவதற்கு சித்தம் கொண்டார்!" (ஏசாயா.53:10) என்ற வாசகங்களால் ஈர்க்கப்பட்டு..... மேலும், தேவனுடைய பரிபூரண சித்தமும் அவரது கையினால் வாய்த்தது! என்றும், இந்த பூமியிலுள்ள அவரது சொந்த ஜீவன் எடுபட்டுப் போனாலும் "அவருடைய வம்சம்" சொல்லி முடியாதது! போன்ற ஆச்சரிய சுவிசேஷமாய் மந்திரி தியானித்தார்! **இது யாரைக் குறித்தது?** என்று மந்திரி வியந்த நேரத்தில்.... தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி பிலிப்பு அவரது ரதத்திற்கு வந்துச் சேர்ந்தார்!

பிலிப்பு அவரிடம், "நம் போன்ற மாம்சத்தில் மனுஷகுமாரனாய் வந்த இயேசுவை, அவரது பிதாவாகிய தேவன் எவ்வாறெல்லாம் அவரை 'நிந்திக்கப்பட்டார், அவமானப்படுத்தப்பட்டார்....' போன்ற மனுஷருக்குரிய எல்லா பாடுகளுக்கும் அவரை உட்படுத்தி! அந்த பாடுகளில் அவர் பிரவேசித்து.... இயேசு நொறுங்குண்டதையும்! அதன் மூலமாய் அவர் தன் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி! அவரது கரத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டு! பிதாவின் பேரின்ப சமூகத்திற்குள் பிரவேசித்தார்! ....." என்றும் விவரிக்க விவரிக்க..... மந்திரியின் உள்ளம் "இந்த சுவிசேஷத்தை" விசுவாசித்து, அவரது உள்ளம் இயேசு சென்ற சிலுவை வழியைப் பின்பற்ற, பேரார்வமுடன் பற்றி எரிந்தது!

**அப்போது அவர் "இதோ, தண்ணீர்..... நான் இதில் மூழ்கி எழ எனக்கு என்ன தடை?" என கூக்குரலிட ..... அவரது பேரார்வத்தைக் கண்ட பிலிப்பு "நீர் விசுவாசித்தால்.... தடை ஏதும் இல்லை" என ஆச்சரியத்துடன் கூறினார். "நான் விசுவாசிக்கிறேன்!" என கூறி அந்த சந்தர்ப்பத்தில் கிடைத்த தண்ணீரில் மூழ்கி எழுந்தார்!**

"இதோ, தண்ணீர்!" என கூறிய மந்திரியும், அவரோடு பயணித்த பிலிப்புவும் குருவை பின்பற்ற தீரா வேட்கைக் கொண்ட அவரது பக்தர்களும் 'இதோ தண்ணீர்!' என்ற ஆச்சரியத்தை அறிந்திருக்கி றார்கள்! .... அந்த தண்ணீர், பாடுகளுக்குள் பிரவேசிக்கும் 'நல்ல சந்தர்ப்பமாகிய' துன்பத்தின் சூழ்நிலைகளேயாகும்! இன்றும், ஆவியில் நிறைந்து வாழும் அவரது சீஷர்கள் "**அவருடைய பாடுகளுக்குள் பெற்றிடும் இந்த ஸ்நானத்தை**" ஸ்தோத்திரம் பாடி முங்குகிறார்கள்! நொறுங்குண்டு, பிதாவின் சித்தம் செய்கிறார்கள்! அவரது அன்பின் ஐக்கியத்தின் பேரின்பம் காண்கிறார்கள்! ஆஹா, இதுபோன்ற தாசர்கள் கூடிவரும் ஐக்கியமே 'பேரின்ப தெய்வ பிரசன்னத்தைக்' கொண்ட அவர் வாசம் செய்ய விரும்பும் "**அவரது சபை!**" அல்லேலூயா.

– T.ரத்தினகுமார்



# அந்திரேயா அப்போஸ்தலன்,

## சிலுவையிலிருந்து தப்பித்திட மறுத்த சீஷன்!

(AD 66)

ரோம கவர்னர் அகாயஸ் "நீதானே எங்கள் ஜனங்களை வழிதிருப்பி உன்னுடைய அற்புதம் செய்யும் தேவனை வணங்கும்படி செய்தாய்! பல சபைகளும் ஸ்தாபித்தாய்! உன்னுடைய நூதனமான மதத்தை ஒன்றுமில்லாமல் அழித்திட ரோம அரசாங்கம் தேசமெங்கும் கட்டளை பிறப்பித்திருக்கிறது!" என கொதிப்புடன் பேசினான். அதற்கு அந்திரேயா "ரோமானிய இளவரசர்கள் சத்தியத்தை அறிந்து கொள்ளவில்லை. மனுஷர்களுக்காகவே பரலோகத்திலிருந்து இந்த உலகிற்கு வந்த தேவகுமாரன், நீங்கள் ஆராதிக்கும் விக்கிரகங்கள் அரக்க குணமான பிசாசுகள் என்றும், மனுக்குலத்தை சீரழிக்கும் எதிரி! என்றும் போதித்துள்ளார். உங்கள் தேவதைகள் தெய்வ தன்மைக்கு விரோதமானவர்கள். இந்த பிசாசுகளை நீங்கள் ஆராதிப்பதினிமித்தம், ஜனங்கள் பல்வேறு தீமைகளுக்கும், காம மோகங்களுக்கும் உட்பட்டிருக்கிறார்கள். உங்கள் ஜனங்கள் மரிக்கும்போது 'அவர்களின் பொல்லாத கிரியைகளே' எஞ்சி நிற்கிறது....." என கூறிக்கொண்டிருக்கும்போதே "போதும் நிறுத்து!.....உன் போதகம் எங்களுக்கு வேண்டாம்! நீ விரைவில் சிலுவையில் கட்டப்படுவாய்" என ஆத்திரத்தோடு கூறினான். அதற்கு அந்திரேயா **"இந்த சிலுவையின் மரணத்திற்கு நான் அஞ்சுகிறவனாய் இருந்தால், இந்த சிலுவை வழங்கும் மகத்துவத்தையும், கனத்தையும், மகிமையையும் நான் பிரசங்கித்திருக்கவே மாட்டேன்!** ஆ,எந்தன் மேன்மையான சிலுவை!" என உறுதிகொண்ட தன் நிலையை வெளிப்படுத்தினார். அதற்கு *அகாயஸ்* "இவனை உடனே சிலுவையில் அப்புறப்படுத்துங்கள்" என கூறினான். அந்திரேயா சிலுவைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, தனக்காக நாட்டி வைக்கப்பட்ட சிலுவையை நெருங்கியபோது அவருடைய இருதயத்தில் அச்சத்திற்கு பதிலாய் "இயேசுவின் தீவிரமான அன்பு" கொழுந்துவிட்டு எரிந்தது. "ஓ, எந்தன் சிலுவையே உன்னை ஆர்வமுடன் வரவேற்கிறேன். 'இயேசுவின் மெய் சீஷனாய்' சிலுவையில் தொங்குவதற்கு உன்னிடம் மகிழ்ச்சியுடன் வருகிறேன். இதோ, சிலுவையை நெருங்க நெருங்க, தேவனிடம் நெருங்குவதாகவே காண்கிறேன்!" என உள்ளம் பூரித்தார்.

சிலுவையில் தொங்கிய 3 நாட்களும், தன் நாவில் ஈரம் வற்றும் வரை, அவரை கண்ணீருடன் காண வந்த கிறிஸ்தவ விசுவாசிகளை "நீங்கள் கற்றுக்கொண்ட சத்தியத்திலும் போதகத்திலும் உறுதியாய் நில்லுங்கள்! அப்போது நீங்கள் தேவனோடு நித்தியத்தில் வாசம் செய்வீர்கள்! அவருடைய வாக்குதத்தத்தின் முழு பலனையும் அடைவீர்கள்!" என கூறிகொண்டே இருந்தார். இவ்வாறு கூறிய அவர், இயேசுவைப்போலவே தன் ஆவியை தன் பிதாவிடம் ஒப்படைத்தார்.

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## கர்த்தாவின் ஒளியின் இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமா?

பிரியமான கர்த்தருடைய ஒரு சகோதரியை பல ஆண்டு காலமாக நானறிவேன். கர்த்தருடைய பரிசுத்த நாமத்தினிமித்தம், என்னையும் என் ஊழியத்தையும் ஊக்கமான ஜெபத்தால் ஆதரிக்கும் சகோதரி அவர்கள்! வயது முதிர்ச்சியினிமித்தம் கடந்த சில மாதங்களாக வியாதிப்பட்டு மிகவும் அல்லல்பட்டார்கள். அவர்களுக்காகத் தேவ மக்கள் பலர் ஏறெடுத்த ஜெபங்கள் எதுவும் பலனளிக்கவில்லை. மரிப்பதற்கு முந்தியநாள் இரவு, நான் அவர்களைக் காணச் சென்றிருந்தேன். மிகவும் அமைதியாகப் படுத்திருந்தார்கள். வலியின் காரணமாக அவ்வப்போது மாத்திரம் சற்று குரல் எழுப்பினார்கள். நான் அவர்கள் அருகினில் சென்று அவர்களின் கரத்தைப் பிடித்தேன். அது ஐஸ்கட்டிபோல அத்தனையான குளிர்ச்சி நிலையிலிருந்தது. அவர்கள் முகத்துக்கு நேராகக் குனிந்து நான் அவர்களைக் கூப்பிட்டபோது தனது கண்களைத் திறந்து, மலர்ந்த முகத்துடன் என்னை நோக்கிப்பார்த்தார்கள். “அம்மா, ஆண்டவரைச் சந்திக்க ஆயத்தமாயிருக்கின்றீர்களா?” என்று நான் அவர்களைக் கேட்டேன். என்ன ஆச்சரியம், நான் அந்தக் கேள்வியைக் கேட்டவுடனே, அமைதியில் இருந்த அவர்கள் “அல்லேலூயா” என்று மிகவும் சப்தமாகக் கூறினார்கள். **“ஐயா நான் ஆயத்தமாகவே இருக்கின்றேன்.** எனக்காக ஜெபியுங்கள்” என்று கூறினார்கள்.

அவர்கள் படுக்கை அண்டையில் நான் முழங்கால்படியிட்டுச் சகோதரியை நித்திய இளைப்பாறுதலுக்கு ஒப்புக்கொடுத்து ஜெபித்துவிட்டு வந்தேன். அடுத்தநாள் காலையில், அவர்கள் அதிகமாக நேசித்த தனது நல் மேய்ப்பரது ஆனந்த சமூகத்திற்குக் கடந்து சென்றுவிட்டார்கள். ஆண்டவருடைய பரிசுத்த பிள்ளைகளின் ஆனந்த நம்பிக்கை இது ஒன்றுதான். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் தீத்துவுக்கும் இதையேதான் குறிப்பிட்டு எழுதியிருப்பதை நாம் காணலாம். “நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி” நமக்குப்போதிக்கிறது (தீத்து.2:13).

ஓ, வாலிபனே நீ இந்த நாட்களிலேயே உன்னை கர்த்தருக்கு ஒப்புவித்து, வாழ்ந்துவிடு! நிறைவான பக்தி வாழ்க்கை மாத்திரமே, உன்னை அந்த அம்மையாரைப்போல “மரணத்தை மகிழ்வுடன் தாண்டி” ஒளிமிகுந்த கர்த்தாவின் இராஜ்ஜியத்திற்குள் உன்னை கொண்டு சேர்க்கும்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.